## 28.32 கல்வித் துறையிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுதல் மற்றும் பொது நூலகங்கள் குறித்து அதிகாரங்கள் வழங்குதல்

---

பள்ளிக் கல்வித் துறை

அரசாணை (நிலை) எண்.248 நாள் : 11.06.1997

படிக்க :

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994.

**ஆணை**

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994 ஆனது ஏப்ரல் 1994–ம் ஆண்டு இயற்றப்பட்டது. அதன்படி மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்பு முறையை தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மூலமாக அதாவது கிராமம், இடைப்பட்ட உள்ளாட்சி அமைப்பு மற்றும் மாவட்ட அளவில் நிறுவுவதற்காக பஞ்சாயத்துக்கள் குறித்த அரசியலமைப்பு (73–வது திருத்தம்) சட்டம் 1992–ஐ கருத்தில் கொண்டு மக்கள் பெருமளவில் பங்கு கொள்ளும் தன்னாட்சி பெற்ற அமைப்புகள் மற்றும் கிராம வளர்ச்சி திட்டங்கள் பெருமளவில் நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றை கருத்தில் கொண்டு இயற்றப்பட்டது. தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994–ல் ஆரம்பக் கல்விச் சார்ந்த பொருள், உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்து வழங்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேற்படி சட்டத்தின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கல்வித் துறையிலிருந்து சில அதிகாரங்களை மாற்றம் செய்வது குறித்து ஆராயப்பட்டது. நன்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் பின்வரும் அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட முடிவு செய்யப்பட்டு அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

அ) ஊராட்சி தலைவர்கள், நகராட்சி தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், பள்ளிக்கூட கட்டம், கழிப்பறைகள் ஆகியவற்றை பழுதுபார்த்தல், பராமரிப்பு செய்தல் குடிநீர் வசதி செய்து தருதல் போன்றவற்றைக் கவனித்தும், பள்ளிகளை பார்வையிட்டு உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்பலாம்.

ஆ) அவர்கள் அளித்த அறிக்கை அடிப்படையில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய மாதந்திர கூட்டத்தில் கலந்துகொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை தர வேண்டும்.

இ) மாவட்ட தொடக்க கல்வி அலுவலர்கள், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் எடுக்கும் நடவடிக்கையினை ஆய்வு செய்து ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யவேண்டும்,

ஈ) உள்ளாட்சி அமைப்புகள், படிப்பகங்கள் (Reading Rooms) திறக்கலாம். நூலகங்களைத் திறப்பது மற்றும் பராமரிப்பு செய்வது பொது நூலகத் துறையின் பொறுப்பில் மட்டுமே இருக்கும்.

உ) மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஒருவரை மாவட்ட நூலக ஆணைக்குழு (Local Libraries authority) உறுப்பினராகச் சேர்க்க தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948க்கு திருத்தம் கொண்டுவரப்படும்.

3. மேற்படி ஆணையின் அடிப்படையில தக்க நடவடிக்கை மேற்கொண்டு சார்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடுமாறு தொடக்க கல்வி இயக்குநர்/பொது நூலகத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அரசு செயலாளர்